2014 ஆகஸ்ட் 5]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 341, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன், மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

341—

மீன் இறங்கு தளம்

***36211—திரு. மு. முருகன்:**

மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) முதுகுளத்தூர் தொகுதி, வாலிநோக்கத்தில் மீன் இறங்கு தளம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால், மீன் வளத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) முதுகுளத்தூர் தொகுதி, வாலிநோக்கத்தில் மீன் இறங்கு தளம் அமைப்பது தொடர்பான திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை தங்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. முருகன் அவர்கள்.*

திரு. மு. முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தரை மேல் பிறக்க வைத்தான், எங்களை தண்ணீரில் பிழைக்க வைத்தான்" என்று பாடி மீனவ நண்பனாய் வாழ்ந்தவர் புரட்சித் தலைவர். மீனவ மக்களின் வாட்டத்தைப் போக்கி, மீனவர்களின் நலன் காக்கும் தாயாக விளங்கும் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகிறேன்.*

முதுகுளத்தூர் தொகுதியில் சுமார் 50 கிலோ மீட்டர் வரை கடற்கரை உள்ள ஏர்வாடி, வாலிநோக்கம், கீழமுந்தல், மாரியூர், ஒப்பிலான், மூக்கையூர், நரிப்பையூர் மற்றும் ரோஸ்மா போன்ற பகுதிகளில் பெரிய அளவிற்கு மக்கள் மீன்பிடித் தொழிலைச் செய்து வருகின்றனர். சென்ற ஆண்டு ரோஸ்மா நகரில் 4.25 கோடி மதிப்பீட்டில் மீன் இறங்கு தளம் அமைத்துத் தந்த, மீனவ மக்களின்

பாதுகாவலராய் விளங்கும் தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு தொகுதியினுடைய மக்களின் சார்பாகவும், மீனவ மக்களின் சார்பாகவும், என் சார்பாகவும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், ரோஸ்மா நகரில் உள்ள மீனவ மக்கள் காற்றடிக்கும் காலங்களில் மீன் பிடிக்க முடியாமல் வேறு இடங்களுக்குச் சென்று மீன்பிடித் தொழிலைச் செய்து வருகின்றனர். எனவே, ரோஸ்மா நகரில் மீன்பிடி தூண்டில் வளைவு அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். வாலிநோக்கத்தில் மீன்பிடிக்கும் இயற்கையான துறைமுகம் அமைந்துள்ளது. சுனாமிக்குப் பின்பு இங்கு கடல் நீர் உள்வாங்கி உள்ளதால், படகுகளைப் பயன்படுத்த முடியாத நிலையில் ஜெட்டி உள்ளது. எனவே, அப்பகுதியில் புதிய ஜெட்டி மற்றும் மீன் இறங்குதளம் ஆகியவற்றை அமைத்துத் தர வேண்டுமாய் மீனவ சமுதாய மக்களைக் காத்து நிற்கும் காவல் தெய்வமாய் விளங்கும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களை வணங்கி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

முற்பகல் 11—00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்—விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.ஏ. ஜெயபால்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெங்களூருவில் உள்ள Central Institute of Coastal Engineering for Fishery (CICEF) என்ற நிறுவனத்தின்மூலம் வாலிநோக்கத்தில் ஆய்வு செய்யப்பட்டு, மீன்பிடி இறங்குதளம் அமைக்க வடிவமைக்கப்பட்டது. அதன்படி, 1982 ஆம் ஆண்டு, மத்திய, மாநில அரசுகளின் நிதி பங்களிப்புத் திட்டத்தின்கீழ், ரூ.77 இலட்சம் மதிப்பீட்டில் மீன் இறங்குதளம் கட்டுவதற்கு மீன்பிடி துறைமுக திட்டத்தின்மூலம் M/s.Complex Pile Foundation என்ற நிறுவனத்திற்கு ஒப்பந்தம் வழங்கப்பட்டு, 250 மீட்டர் நீளமுள்ள அலைத் தடுப்புச் சுவர் மற்றும் 140 மீட்டர் நீளமுள்ள படகு அணையும் சுவர், மீன் குளிரூட்டும் அறை, சாலை மற்றும் அலுவலகம் கட்டும் பணிகள் முடிவுற்றிருந்தன. மேலும், படகு அணையும் தளம், Finger Jetty அமைக்கப்படுவதற்கான concrete piles

அமைக்கும் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கையில், 7 ஆண்டுகள் ஆகியும், பணிகள் முடிக்கப்படாத காரணத்தினால், 1989 ஆம் ஆண்டு அந்த ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது. மேலும், அப்பகுதியில் சிறிது, சிறிதாக மண் திட்டுக்கள் சேர்ந்து, மண் மேடாகி, பயன்படுத்த முடியாத நிலையில் மீன் இறங்குதளம் அமைக்கும் பணிகள் கைவிடப்பட்டன. இந்நிலையில், இப்பணியின் ஒப்பந்ததாரர் தொகை பெறுவது குறித்து உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்ததன்பேரில், வழக்கு நீதிமன்றத்தில் உள்ள காரணத்தால், அங்கு மீன்பிடி துறைமுகம் அமைக்க இயலாது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 342, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். ரமணீதரன், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

342—

வீட்டுமனைப் பட்டா

***12229—திரு. எஸ்.எஸ். ரமணீதரன்:**

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அந்தியூர் தொகுதி, சவுண்டப்பூர் கிராமத்தில் ஆண்டிக்காடு பகுதியிலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ஆர்.பி. உதயகுமார், வருவாய்த் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிப்பாளையம் வட்டம், சவுண்டப்பூர் கிராமம், புல எண் 44/1—ல் உள்ள 3.44.5 ஹெக்டேர் நிலம் அருள்மிகு செல்லியாண்டியம்மன் கோயிலுக்குச் சொந்தமானது. இந்த நிலம், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. மேற்படி நிலத்தில் வசிக்கும் ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்களுக்கும், இதர இனத்தவர்களுக்கும் வீட்டுமனை ஒப்படை வழங்க ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அலுவலர்மூலம் நடவடிக்கை